# அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

## அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2025

# தமிழ்

# ஆண்டு 10

நேரம்: 180 மணித்துளிகள்

நாள்: 07.06.2025

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 20

சுட்டெண் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

### 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1. தாய்நாட்டுக்காகப் போரிட்டுச் சாவடைவோர்
   1. பெரியார்கள்
   2. மாவீரர்கள்
   3. மன்னர்கள்
   4. சான்றோர்கள்

2. ஊடகப்பொறிகளுள் ஒன்று
   1. இயற்கை
   2. விளையாட்டு
   3. செய்தித்தாள்
   4. போட்டி

3. பழந்தமிழரது வாழ்க்கைக் கோலங்கள், ஒழுக்கங்கள் அடங்கும் கூறு
   1. முதற்பொருள்
   2. கருப்பொருள்
   3. உரிப்பொருள்
   4. நிலப்பொருள்

4. செயப்படுபொருளைக் காட்டும் வேற்றுமை உருபு
   1. கு
   2. ஐ
   3. இல்
   4. இன்

5. தமிழர் வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த நூல்
   1. நாலடியார்
   2. புறநானூறு
   3. தொல்காப்பியம்
   4. அகநானூறு

6. விருப்பம், பற்று, ஆசை என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
   1. மகிழ்ச்சி
   2. வேட்கை
   3. பொறுமை
   4. பணிவு

7. கி.மு 1500 ஆண்டளவில் இந்தியாவுக்குள் நுழைந்தவர்கள்
   1. போர்த்துக்கேயர்
   2. ஆங்கிலேயர்
   3. ஆரியர்
   4. ஒல்லாந்தர்

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

8. தத்தம் பொருளுணர்த்தும் இடைச்சொற்களுள் ஒன்று
   1. கின்று
   2. கண்
   3. ஏகாரம்
   4. அத்து

9. நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப்பட்ட பரிசு
   1. பணம்
   2. நோபல்
   3. வீடு
   4. நிலம்

10. பருகாமல் என்பது
   1. பெயரெச்சம்
   2. எதிர்மறைப் பெயரெச்சம்
   3. வினையெச்சம்
   4. எதிர்மறை வினையெச்சம்

11. நான்கு உறுதிப் பொருள்களுள் அடங்காதது
   1. அறம்
   2. இன்பம்
   3. துன்பம்
   4. வீடு

12. தேவாரங்கள், திருவாசகங்களின் தொகுப்பு
   1. பிரபந்தம்
   2. திருமுறைகள்
   3. இயல்
   4. காதை

13. காலத்தை வெளிப்படையாகக் காட்டும் வினை
   1. தன்வினை
   2. பிறவினை
   3. தெரிநிலைவினை
   4. குறிப்புவினை

14. ஆற்றங்கரை என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
   1. ஆற்றம் + கரை
   2. ஆரு + கரை
   3. ஆற்றங் + கரை
   4. ஆறு + கரை

15. வடிவத்திலும் அளவிலும் ஒத்த சிறிய கற்கள்
   1. பாறை
   2. மணல்
   3. கற்பதுக்கை
   4. பரல் கற்கள்

16. ஈழம் பிரித்தானியர் ஆட்சியிலிருந்து விடுபட்ட ஆண்டு
  1. 1956
  2. 1948
  3. 1505
  4. 1972

17. நண்டின் வாழிடம் வளை. அதுபோல ஆட்டின் வாழிடம்
  1. தொழுவம்
  2. குகை
  3. பட்டி
  4. கொட்டில்

18. வெயில் முன் பனிபோல என்ற உவமைத்தொடரின் பொருள்
  1. தோன்றல்
  2. வருதல்
  3. மறைதல்
  4. மினுங்குதல்

19. நடுகல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் தகவல்களைக் கூறும் பழந்தமிழ் இலக்கியங்களுள் ஒன்று
  1. நற்றிணை
  2. நாலடியார்
  3. அகநானூறு
  4. திருக்குறள்

20. காரண இடுகுறிப்பெயராக வரும் சொல்
  1. மரம்
  2. நாற்காலி
  3. வாழை
  4. பனை

21. சோழர் காலத்தில் இயற்றப்பட்ட சிற்றிலக்கியங்களுள் ஒன்று
  1. பெரியபுராணம்
  2. நிகண்டு
  3. கலிங்கத்துப்பரணி
  4. தண்டியலங்காரம்

22. தமிழிலக்கிய வரலாற்றில் காப்பியகாலம் எனக் குறிப்பிட்ட காலம்
  1. ஐரோப்பியர் காலம்
  2. சோழர் காலம்
  3. பல்லவர் காலம்
  4. நாயக்கர் காலம்

23. வைக்கோலின் தொகுதியைக் குறிக்கும் மரபுப்பெயர்
  1. கூட்டம்
  2. கொத்து
  3. கூடல்
  4. கற்றை

24. இலக்கியங்கள் கூறும் போர் அறங்களுள் ஒன்று
  1. தெய்வவழிபாடு
  2. அரசவழிபாடு
  3. நடுகல்வழிபாடு
  4. இயற்கைவழிபாடு

25. குரலெழுப்பிச் சொல்லுதல் என்னும் பேச்சின் வகை
  1. கூறுதல்
  2. கத்துதல்
  3. ஓதுதல்
  4. உரைத்தல்

26. அழுத்திச் சொல்லுதல் என்ற பொருள் தரும் மரபுச்சொற்றொடர்
  1. வெட்டிப்பேச்சு
  2. இடித்துரைத்தல்
  3. ஆற்றுப்படுத்துதல்
  4. முகங்கொடுத்தல்

27. அறம் தவறாது அன்புடன் கூடி வாழும் குடும்ப வாழ்வு
  1. துறவறம்
  2. நட்பறம்
  3. போரறம்
  4. இல்லறம்

28. ஒரு சொல்லியத்தின் கருத்தை முடிக்கும் உறுப்பு
  1. எழுவாய்
  2. செயப்படுபொருள்
  3. அடைமொழி
  4. பயனிலை

29. தமிழரது இரண்டாம் கட்டப் புலப்பெயர்வுக்குக் காரணம்
  1. ஆள்புலம் இழப்பு
  2. எல்லை விரிவாக்கம்
  3. பொருண்மிய நோக்கம்
  4. இன அழிப்பு

30. தகுதி வழக்கில் இறைவனடி சேர்ந்தார் என்பது
  1. இடக்கரடக்கல்
  2. மங்கலம்
  3. குழூஉக்குறி
  4. இலக்கணப்போலி

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

30x1 = 30 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஊடகத்தால் தமிழ்மொழியில் சிதைவுகள் ஏற்படக் காரணங்கள் யாவை?

_______________________________________________

_______________________________________________

2. மேலைத்தேய மொழியியலாளர் தொல்காப்பியத்தை ஆராய்ந்து ஏன் வியப்படைந்தனர்?

_______________________________________________

_______________________________________________

3. புலம்பெயர்ந்த தமிழர் அடுத்த தலைமுறையினருக்கு எவற்றைக் கடத்துவதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்?

_______________________________________________

4. ஆநிரை கவர்தல் என்றால் என்ன?

_______________________________________________

_______________________________________________

5. பேச்சுவழக்குச் சொல்லியத்தை எழுத்துவழக்குச் சொல்லியமாக மாற்றி எழுதுக. நாங்க சுற்றத்தாரோட ஒத்துமையா வாழ வேணும்.

_______________________________________________

6. எழுது என்ற வினையடியிலிருந்து வரும் தன்வினை, பிறவினை என்பவற்றை எழுதுக.

தன்வினை: _______________________________________

பிறவினை: _______________________________________

7. காண் என்ற வினையடியிலிருந்து வரும் பெயரெச்சம், வினையெச்சம் என்பவற்றை எழுதுக.

பெயரெச்சம்: _____________________________________

வினையெச்சம்: ____________________________________

5x2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.

**மாந்தருக்கு இன்றியமையாதது உயிர். அந்த உயிரினும் மேலானது ஒழுக்கமாகும். ஒருவரது ஒழுக்கமே மற்றவர்கள் முன் அவரை உயர்வாகக் காட்டும். எல்லோருக்கும் நன்மை செய்யும் குணம், இனிய பேச்சு, உண்மை பேசுதல், அன்பு காட்டுதல் போன்ற பல நற்குணங்கள் ஒழுக்கத்தில் அடங்குகின்றன. இதை ஒரு சொல்லில் நன்னடத்தை எனவும் கூறலாம். நாம் எம் முன்னோர் காட்டிய நல்லொழுக்க வழிகளில் செல்ல வேண்டும். ஒழுக்கத்தைப் பின்பற்றி வாழ்ந்தால் இவ்வுலகில் வாழும்போதும் இறந்த பின்பும் எம்மை உலகம் போற்றும். நாம் எங்கு வாழ்ந்தாலும் எந்தச் சூழலில் வாழ்ந்தாலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழவேண்டும். நல்லொழுக்கம் பற்றிச் சிந்திக்காமல் வாழும் வாழ்க்கையானது, ஒருவரைத் தீயவழிகளுக்குக் கொண்டு செல்லும். இதனால், பல விளைவுகள் ஏற்படும். எடுத்துக்காட்டாக, உடலுக்குக் கேடு விளைவிக்கும் சில பழக்க வழக்கங்களால் உடல்நலம் கெட்டு, பல நோய்கள் உண்டாகும்; குடுமகாயம் பழிக்கும்; எல்லோராலும் ஒதுக்கப்பட்டு வாழ்க்கை சீரழியும். எனவே, நாம் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து புகழ் பெற்று வாழ்வோம்.**

10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள உரைப்பகுதியை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

**ஐக்கிய இராச்சியம் - கனடா:**

Today the use of transport vehicles has been increasing significantly. As a result, accidents have also increased on the roads. Those who are injured or unconscious due to accidents need to receive immediate medical attention. The assistance provided until proper medical facilities are available is called first aid. Each of us should have knowledge about this first aid.

**பிரான்சு:**

Aujourd'hui, l'utilisation des véhicules de transport a considérablement augmenté. Par conséquent, les accidents sur les routes ont également augmenté. Les personnes blessées ou évanouies à la suite d'accidents doivent recevoir des soins médicaux immédiats. L'aide fournie jusqu'à ce que des soins médicaux appropriés soient disponibles est appelée premiers secours. Chacun d'entre nous devrait être connaître de ces premiers secours.

**நோர்வே:**

I dag har bruken av transportmidler økt betydelig. På grunn av dette har også antallet ulykker på veiene økt. Personer som blir skadet eller mister bevisstheten i slike ulykker må få umiddelbar medisinsk hjelp. Hjelpen som gis frem til riktig medisinsk behandling er tilgjengelig, kalles førstehjelp. Hver og en av oss bør ha kunnskap om denne førstehjelpen.

**இத்தாலி:**

Oggigiorno l'utilizzo dei mezzi di trasporto è molto in aumento. Di conseguenza, gli incidenti nelle strade sono aumentati. Bisogna prestare immediata assistenza medica a coloro coinvolti in incidenti, rimasti feriti e svenuti. L'aiuto che viene prestato, fino a quando un'adeguata assistenza medica non è disponibile, viene chiamato primo soccorso. Ognuno di noi dovrebbe essere informato sul primo soccorso.

**நெதர்லாந்து:**

Tegenwoordig neemt het gebruik van transportmiddelen aanzienlijk toe. Hierdoor is er een toename in verkeersongevallen. Er moet snel medische hulp komen voor gewonde en bewusteloze slachtoffers. Eerste hulp is de hulp die moet worden verleend totdat de juiste medische hulp beschikbaar is. Dit wordt eerste hulp genoemd. Wij zouden allemaal moeten weten hoe we eerste hulp kunnen bieden.

**டென்மார்க்:**

I dag er brugen af transportmidler stærkt stigende. Dette har ført til en stigning i antallet af ulykker på vejene. Dem, der kommet til skade i ulykker eller mister bevidstheden, skal straks have medicinsk behandling. Den hjælp, der ydes, indtil der er adgang til passende medicinske faciliteter, kaldes førstehjælp. Vi bør alle have viden om  denne førstehjælp.

**சுவீடன்:**

Idag ökar användningen av transportfordon markant. Därför ökar även trafikolyckorna på vägarna. De som blivit skadade eller medvetslösa i trafikolyckor behöver sjukvård omedelbart. Den hjälp som behövs, tills lämplig sjukvård kan ges, kallas första hjälpen. Var och en av oss bör känna till första hjälpen.

**பின்லாந்து:**

Nykyään liikenneajoneuvojen käyttö on kasvanut merkittävästi. Tämän seurauksena onnettomuuksien määrä teillä on lisääntynyt. Onnettomuuksissa loukkaantuneille ja tajuttomille tulee antaa välitöntä ensiapua, kunnes asianmukainen terveydenhuolto on saatavilla. Tätä apua kutsutaan ensiavuksi, ja jokaisen meistä on tärkeää tuntea sen perusteet.

**தமிழ்:**

10 **புள்ளிகள்**

## 5 தரப்பட்டுள்ளனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.

அ. அறிவை வளர்ப்பது கல்வி என்று தொடங்கி,
ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.

ஆ. படத்துக்கான கவிதையை ஆறு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.



இ. பாடலுக்கான பொருளுரையை எழுதுக.

நாட்டிற்காய்ப் போரில் மாய்ந்து நடுகல்லில் நின்ற வீரர்
பாட்டிற்கே விருந்தாய் வாழப் பரம்பரை உணர்ச்சி இன்றி
வீட்டிற்கே உழைத்து வாழ்தல் வீரமோ விழித்தெழுந்து
நாட்டிற்காய்த் தொண்டு செய்வோம் நம் தமிழ் இளைஞர் வாரீர்!

- வித்துவான் க. வேந்தனார்

10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைப்பற்றி 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. ஈழத்தமிழர் வரலாறு
2. அரங்கேற்றம்
3. நான் படித்து மகிழ்ந்த ஒரு கதை

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - எழுத்தாளரும் எழுதப்பட்ட மொழியும்
   - கதைச் சுருக்கம்
   - கதை மாந்தர்கள்
   - மகிழ்விற்கான காரணம்
4. நோயற்ற வாழ்வு

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - உடல்நலம் பேணுதல்
   - நோய்கள் ஏற்படக் காரணங்கள்
   - நோய்களைத் தடுக்கும் முறைகள்

15 புள்ளிகள்

# பகுதி 2
# வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

திருவள்ளுவர் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத தொலைநோக்குப் பாவலர். இவர் எழுதிய திருக்குறளானது நாடு, இனம், மதம் போன்ற வேறுபாடுகளைக் கடந்து உலகம் போற்றும் பொதுமறையாக விளங்குகிறது. இது பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளது என்பதை நாம் அறிவோம். திருக்குறளின் பெருமைகளை உலகம் அறியும் வகையில் வேறு பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டிலுள்ள கன்னியாகுமரியில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையைக் குறிப்பிடலாம். அண்மையில் ஈழத்தில் மாவிட்டபுரம் என்னும் ஊரில் திருக்குறள் வளாகம் என்ற கட்டடம் மிகப் பெரியளவில் கட்டப்பட்டுள்ளது. இவ்வளாகத்தில் 1330 குறள்களும் கருங்கற்களில் பதிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி, திருக்குறளின் மொழிபெயர்ப்பு நூல்களைக் காட்சிப்படுத்தியும் வைத்துள்ளனர். இக்கட்டடத்தில் உள்ள அறைகள் ஒவ்வொன்றும் திருக்குறளின் சிறப்பைக் கூறுகின்றன. திருக்குறள் வளாகமானது, தமிழின் பெருமையை என்றும் நிலைநாட்டும் நோக்கத்துடன் பலரது முயற்சியால் உருவாக்கப்பட்டுள்ளது. ஈரடிகளால் மாந்த வாழ்வியலைப் பற்றிக் கூறும் திருக்குறள் தமிழுக்குக் கிடைத்த அழியாச் செல்வம்.

1. திருவள்ளுவர் சிலை எங்கே உள்ளது?

______________________________

______________________________

2. திருக்குறள் எவற்றைக் கடந்து பொதுமறையாக விளங்குகிறது?

______________________________

______________________________

3. திருக்குறள் வளாகத்தின் சிறப்புகளுள் இரண்டை எழுதுக.

______________________________

______________________________

4. இது எங்கே அமைந்துள்ளது?

______________________________

______________________________

5. திருக்குறள் வளாகம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

______________________________

______________________________

5x2 = 10 புள்ளிகள்

**2. தொலைபேசி உரையாடலை வாசித்து, தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளம் இடுக.**

## தொலைபேசி உரையாடல்

செழியன்: வணக்கம் மாமா! நான் செழியன். எப்படி இருக்கிறீர்கள்?
மாமா: ஓ! செழியனா? நாங்கள் நலமே உள்ளோம். நீங்கள்...

செழியன்: எல்லோரும் நலம் மாமா! நாங்கள் இம்முறை கோடை விடுமுறைக்கு சுவிசுக்கு வரவுள்ளோம். அதைப் பற்றி அறிவிக்கத்தான் நான் உங்களை அழைத்தேன்.

மாமா: மிக்க மகிழ்ச்சி செழியன். நீங்கள் பார்க்க விரும்பும் இடங்களுக்கு நான் உங்களை அழைத்துச் செல்வேன். அதைப்பற்றி எழுதி அனுப்புங்கள். நான் பயணத்துக்கான ஒழுங்குகளைச் செய்கிறேன்.

செழியன்: மாமா! குறிப்பாக, எனக்கு எக்காலத்திலும் பனி கரையாமல் இருக்கும் மலையைப் பார்க்கவேண்டும் என ஆசை. அத்துடன் அங்கு வாழும் உறவினரையும் சந்திக்க விரும்புகிறேன்.

மாமா: எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் வரும் நாளை அறிவியுங்கள்.

செழியன்: சரி மாமா!

1. செழியன் கோடை விடுமுறைக்கு அண்ணனைச் சந்திக்கப் போகிறான். ( )

2. அவனது மாமா இத்தாலியில் வாழ்கிறார். ( )

3. உரையாடலில் மாமாவும் செழியனும் கலந்து கொண்டார்கள். ( )

4. செழியன் சுவிசிலுள்ள உறவினரை மட்டும் காண விரும்புகிறான். ( )

5. எக்காலத்திலும் பனி கரையாமல் இருக்கும் மலை சுவிசில் இருக்கிறது. ( )

5x1 = 5 புள்ளிகள்

குறிப்பு:

குறிப்பு:

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |